**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 411/2013**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏழுமலை | தொழில் | |
| த/பெ | சின்னசாமி | வயது | |
| ஊர் | | தேதி | 17.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (17.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**2 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

இந்த வழக்கினை நான் முதலில் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரி. அங்கு வழக்கு தாக்கல் செய்யும்போது தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி மாவட்ட நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்யும்போது ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாக்கல் செய்வதால் மதிப்பு அதிகம் என்பதால் தடையுத்தரவு பரிகாரம் மட்டும் கோரமுடியாது என்று எனது வழக்குரை திருப்பப்பட்டது என்று சொன்னால் இல்லை . 19.04.2011 தேதியிலேயே நான் ஏற்றதை ஆற்றும்பரிகாரம் வேண்டி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றேன் என்று அதில் குறிப்பிட்டு மீண்டும் வழக்குரையை தாக்கல்செய்தேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு நியாபகமில்லை . எத்தனை வருடங்கள் கழித்து சொத்தினை கிரையம் கொடுக்க வேண்டும் என்று திருத்தம் செய்து தாக்கல் செய்தேன்

என்றால் 2013 ம் வருடம் தாக்கல் செய்தேன் . நான் எத்தனை இன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 இன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . எனக்கு சர்வே எண். தெரியும். 423/2, 473/4, 5, 9 , 1. ஒவ்வொரு இன சொத்திற்கும் ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதி வருடம்மாதத்தில் எனக்கு எழுதி கொடுத்ததாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 10.05.2010 ம் வருட ஒப்பந்தத்தின் பேரில் வழக்கினை தாக்கல் செய்தேன் . அந்தஒப்பந்தம் எனக்கும் ஏழுமலை என்பவருக்கும் இடையே ஏற்பட்டது . அதில் குப்புசாமி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் . குப்புசாமி எங்கள் ஊரான வி .புதுரை சார்ந்தவர் . கிருஷ்ணமூர்த்தி என்பவர் குடுமியான்குப்பத்தை சேர்ந்தவர் அவர் எனது நண்பர் அவது என்னுடன் வருபவர். கிருஷ்ணமூர்த்தி குப்புசாமி என்பவர்கள் எனக்கு சிறு வயது முதலே பழக்கம். ஏழுமலை 2009 அல்லது 2010 ம் வருடம் இறந்துவிட்டார் . ஏழுமலை என்பவர் எனது அக்காவின் கணவர்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

Sd/M.S. Varalakshmi
I Additional Subordinate Judge,
Villupuram